# தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்

## 18,775 கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்

## தேர்தல் திட்டம் அறிவிப்பு

கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் கடந்த 2013–ம் ஆண்டு நடந்தது. தேர்வு செய்யப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களின் 5 ஆண்டு பதவிக்காலம் ஏப்ரல் மாதம் முடிவடைய உள்ளது. புதிதாக நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு பதவியேற்பதை உறுதி செய்வதற்கு ஏதுவாக, நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்களை கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் நடத்தவுள்ளது.

கூட்டுறவுத்துறை, பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை, மீன் வளத்துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை, கூட்டுறவு வீட்டுவசதித் துறை, பனைப்பொருள் வளர்ச்சி வாரியம், கதர் கிராம தொழில் வாரியம், தொழில் மற்றும் தொழில் வணிகத்துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை, வேளாண்மைத்துறை, சமூக நலத்துறை, ஊரக வளர்ச்சி பஞ்சாயத்துராஜ் துறை, பட்டு வளர்ச்சித்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்துறை, சர்க்கரைத்துறை ஆகிய 15 அரசு துறைகளின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் 18,775 சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்களை கூட்டுறவு தேர்தல் ஆணையம் நடத்த உள்ளது. தொடக்க சங்கங்கள், மத்திய சங்கங்கள், மாநில சங்கங்கள் என்ற மூன்றடுக்கு முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருவதால் அவற்றிற்கான தேர்தல்களை ஐந்து கட்டங்களாக நடத்த கூட்டுறவு தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

அதிக எண்ணிக்கையில் உள்ள 18,435 தொடக்க கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்களை முதற்கட்டத்தில் நான்கு நிலைகளில் நடத்தப்பட உள்ளது. அதற்கான தேர்தல் திட்டத்தை மாநில தேர்தல் ஆணையம் தொடர்புடைய சங்கங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மாவட்ட தேர்தல் அலுவலர்களால் முதல் நிலைக்கான தேர்தல் அறிவிப்பு மார்ச் 12ந்தேதி வெளியிடப்படும்.

அரசு துறைகளின் தலைவர்கள் மாநில தேர்தல் அலுவலர்களாகவும், அத்துறைகளின் மாவட்ட அளவிலான அதிகாரிகள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர், சென்னை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்கள் மாவட்ட தேர்தல் பார்வையாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கூட்டுறவுச் சங்க தேர்தல்களை நியாயமாகவும், சுதந்திரமாகவும், சட்டபூர்வமாகவும் நடத்திட மாவட்ட நிர்வாகம் தேவையான ஒத்துழைப்பை தந்திட மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திட மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களையும் கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

(ஒம்./–)
**முனைவர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப.,**
**தேர்தல் ஆணையர்.**

**இணைப்பு :**
கூட்டுறவு தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட தொடக்க நிலை கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் திட்டம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

இணைப்பு

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

கூட்டுறவு தேர்தல் 2018
(முதல் கட்டம்)

| வ. எண் | மாநில தேர்தல் அலுவலர் | தேர்தல் நடைபெற வேண்டிய கூட்டுறவு சங்கங்களின் விவரம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 4 | மொத்தம் |
| 1 | கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் | 1683 | 1723 | 1737 | 1922 | 7065 |
| 2 | இயக்குநர் பால்உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | 1725 | 1664 | 1621 | 1495 | 6505 |
| 3 | மீன்வளத்துறை இயக்குநர் | 218 | 193 | 367 | 599 | 1377 |
| 4 | கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் | 301 | 310 | 323 | 311 | 1245 |
| 5 | கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) | 192 | 178 | 181 | 193 | 744 |
| 6 | தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | 187 | 203 | 204 | 126 | 720 |
| 7 | தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் | 97 | 82 | 70 | 29 | 278 |
| 8 | தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 49 | 29 | 24 | 52 | 154 |
| 9 | கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் இயக்குநர் | 79 | 28 | 0 | 0 | 107 |
| 10 | வேளாண்மை இயக்குநர் | 93 | 0 | 0 | 0 | 93 |
| 11 | சமூக நலத்துறை இயக்குநர் | 49 | 48 | 0 | 0 | 97 |
| 12 | ஊரக வளர்ச்சி பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 13 | பட்டு வளர்ச்சி துறை இயக்குநர் | 12 | 9 | 4 | 0 | 25 |
| 14 | இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் | 13 | 12 | 0 | 0 | 25 |
| 15 | சர்க்கரைத் துறை இயக்குநர் | 0 | 0 | 0 | 0 | 0 |
| | மொத்தம் | 4698 | 4479 | 4531 | 4727 | 18435 |

இணைப்பு

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

## தேர்தல் திட்டம் 2018 (முதற்கட்டம்)

**(தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், 1988, விதி எண். 52 (5 ) (a)- ன் கீழ்)**

| வ. எண் | விவரங்கள் | முதல் கட்டம் | | | |
|---|---|---|---|---|---|
| | | முதல் நிலை | இரண்டாம் நிலை | மூன்றாம் நிலை | நான்காம் நிலை |
| 1. | மாவட்டதேர்தல் அலுவலரால் தேர்தல் அறிவிப்பு வெளியிடும் நாள் | 12.03.2018 | 19.03.2018 | 26.03.2018 | 02.04.2018 |
| 2. | சங்கம் உறுப்பினர் பட்டியலை சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 16.03.2018 | 22.03.2018 | 28.03.2018 | 04.04.2018 |
| 3 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்க உறுப்பினர் பட்டியல் அளிக்க வேண்டிய நாள் | 16.03.2018 | 22.03.2018 | 28.03.2018 | 04.04.2018 |
| 4 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | 19.03.2018 | 24.03.2018 | 02.04.2018 | 07.04.2018 |
| 5 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்கம் உறுப்பினர் பட்டியல் அளிக்காத நேர்வில் வாக்காளர் பட்டியல் அலுவலர் வாக்காளர் பட்டியலைத் தயாரித்து சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 19.03.2018 | 24.03.2018 | 02.04.2018 | 07.04.2018 |
| 6 | வாக்காளர் பட்டியலுக்கு உறுப்பினர் கோருரிமை அல்லது மறுப்பு தெரிவிக்கும் நாள் | 20.03.2018<br>**நேரம் : 10** மு.ப முதல் **5** பி.ப | 26.03.2018<br>**நேரம் : 10** மு.ப முதல் **5** பி.ப | 04.04.2018<br>**நேரம் : 10** மு.ப முதல் **5** பி.ப | 09.04.2018<br>**நேரம் : 10** மு.ப முதல் **5** பி.ப |
| 7 | வாக்காளர் பட்டியலுக்கு கோருரிமை அல்லது மறுப்பு தெரிவித்தது குறித்த வாக்காளர் பட்டியல் அலுவலரின் முடிவுகள் சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 21.03.2018<br>**நேரம் : 5** பி.ப | 27.03.2018<br>**நேரம் : 5** பி.ப | 05.04.2018<br>**நேரம் : 5** பி.ப | 10.04.2018<br>**நேரம் : 5** பி.ப |
| 8 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | 22.03.2018 | 28.03.2018 | 06.04.2018 | 12.04.2018 |
| 9 | வேட்பு மனு தாக்கல் செய்யப்பட வேண்டிய நாள் | 26.03.2018<br>**நேரம் : 10** மு.ப முதல் **5** பி.ப | 31.03.2018<br>**நேரம் : 10** மு.ப முதல் **5** பி.ப | 09.04.2018<br>**நேரம் : 10** மு.ப முதல் **5** பி.ப | 16.04.2018<br>**நேரம் : 10** மு.ப முதல் **5** பி.ப |
| 10 | வேட்பு மனு பரிசீலனை | 27.03.2018<br>**நேரம் : 11** மு.ப முதல் **4** பி.ப | 02.04.2018<br>**நேரம் : 11** மு.ப முதல் **4** பி.ப | 10.04.2018<br>**நேரம் : 11** மு.ப முதல் **4** பி.ப | 17.04.2018<br>**நேரம் : 11** மு.ப முதல் **4** பி.ப |
| 11 | செல்லத்தக்க வேட்பு மனுக்கள் பட்டியல் வெளியிடுதல் | 27.03.2018<br>**நேரம் : 5** பி.ப | 02.04.2018<br>**நேரம் : 5** பி.ப | 10.04.2018<br>**நேரம் : 5** பி.ப | 17.04.2018<br>**நேரம் : 5** பி.ப |
| 12. | வேட்பு மனு திரும்பப் பெறுதல் | 28.03.2018<br>**நேரம் : 10** மு.ப முதல் **4** பி.ப | 03.04.2018<br>**நேரம் : 10** மு.ப முதல் **4** பி.ப | 11.04.2018<br>**நேரம் : 10** மு.ப முதல் **4** பி.ப | 18.04.2018<br>**நேரம் : 10** மு.ப முதல் **4** பி.ப |
| 13 | போட்டியிடும் வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | 28.03.2018<br>**நேரம் : 5** பி.ப | 03.04.2018<br>**நேரம் : 5** பி.ப | 11.04.2018<br>**நேரம் : 5** பி.ப | 18.04.2018<br>**நேரம் : 5** பி.ப |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | தேவைப்படும் நேர்வில் வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | 02.04.2018 **நேரம் : 8** மு.ப முதல் **5** பி.ப | 07.04.2018 **நேரம் : 8** மு.ப முதல் **5** பி.ப | 16.04.2018 **நேரம் : 8** மு.ப முதல் **5** பி.ப | 23.04.2018 **நேரம் : 8** மு.ப முதல் **5** பி.ப |
| 15. | ஓட்டு எண்ணுகை மற்றும் தேர்தல் அலுவலரால் தேர்தல் முடிவு அறிவித்தல் | 03.04.2018 **நேரம் : 10** மு.ப முதல் | 09.04.2018 **நேரம் : 10** மு.ப முதல் | 17.04.2018 **நேரம் : 10** மு.ப முதல் | 24.04.2018 **நேரம் : 10** மு.ப முதல் |
| 16. | தலைவர் / துணைத் தலைவர் தேர்தலுக்கான கூட்ட அறிவிப்பு நாள் | 03.04.2018 | 09.04.2018 | 17.04.2018 | 24.04.2018 |
| 17 | தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் நாள் | 07.04.2018 **நேரம் : 10** மு.ப முதல் | 13.04.2018 **நேரம் : 10** மு.ப முதல் | 21.04.2018 **நேரம் : 10** மு.ப முதல் | 28.04.2018 **நேரம் : 10** மு.ப முதல் |

**ஒம்./--**

**ஆணையர்**